# தரம் -12

# "GEO" Published

22 | T | I

**கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர்தர)ப் பரீட்சை, 2021 ஆவணி**

**General Certificate of Education (Adv. Level) Examination, August – 2021**

## 2ம் தவணை மாதிரிப் பரீட்சை-2021

**புவியியல் - I**
**Geography - I**

**Teacher:-**
**M.Sujinthan, BA(Hons) Spl.Geo**

**மூன்று மணித்தியாலங்கள்**
**Three Hours**

### அறிவுறுத்தல்கள்:-

* இவ்வினாத்தாள் **மூன்று** பகுதிகளைக் கொண்டது. பகுதி **I, 40** பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி **I** இற்கான விடைகள் **இவ்வினாத்தாளிலேயே** எழுதப்பட வேண்டும். ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வழங்கப்படும்.
* பகுதி **II** இல் உள்ள வினாக்கள் **இரண்டிற்கும்** விடையளித்தல் வேண்டும். பகுதி **III** இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் **இரண்டிற்கு** விடையளித்தல் வேண்டும்.
* இப்பத்திரத்திலுள்ள வினாக்களுக்கு விடையளிப்பதற்கு இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதி, உலக புறவுருவப்படம் என்பன வழங்கப்படும்.
* இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக, இலங்கையின் 1:50000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதியும், உலகப் புறவுருவப் படமும், வரைபுத்தாள் ஒன்றும் வழங்கப்படும்.

## பகுதி *I*

* **ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினைப் புள்ளிகோட்டில் எழுதுக.**

1. 1:50000 என்ற அளவுத்திட்டத்தில் அமைந்த தேசப்படங்களில் வரையப்படும் **மெற்றிக் அளியடைப்புக் கோடுகள்** எதனை அடிப்படையாகக் கொண்டு வரையப்படுகின்றது?

   1) சிவனொளிபாதமலையை  2)பீதுருதாலகாலமலையை
   3) அநுராதபுரத்தை  4)தலதாமாளிகையை
   5) மகாவலி கங்கை  (..........)

2. இலங்கையில் ஆரம்பத்தில் பயன்படுத்தப்பட்ட **ஓராங்குலத் தேசப்படத்தில்** பயன்படுத்தப்பட்ட அளவுத்திட்டம்?

   1) 1:10000  2) 1:50000  3) 1:60000  4) 1:63360  5) 1:36330  (..........)

M.SUJINTHAN

**3.** தேசப்படங்களை அகலக்கோட்டு, நெடுங்கோட்டு அடிப்படையில் **முதன் முதலில்** அமைத்தவர்?

1) தொலமி 2) ஏரடோரஸ்தினிஸ் 3)அனெக்சி மென்டர்

4) ஸ்ரோபோ 5) மேற்கற்றோ (...........)

**4.** தேசப்படங்களை **காட்சிப்படுத்தல்** மற்றும் **பகுப்பாய்வு** செய்தல் முறை அறிமுகப்படுத்தப்பட ஆண்டு யாது?

1) 1984 2) 1985 3) 1986

4) 1987 5) 1988 (...........)

**5.** எட்டுக் கிலோமீற்றர் நீளமான வீதியொன்று இடவிளக்கப்படத்தில் **32Cm** ஆல் குறித்துக் காட்டப்படமாயின் அப்டத்தின் **அளவுத்திட்டம்** யாது?

1)1:5000 2) 1:10,000 3) 1:25000

4)1:40000 5) 1:100000 (...........)

**6.** பின்வரும் புவியியல் தகவல் முறைமையில் பயன்படுத்தப்படும் மென்பொருட்களுள் ***"ESRI"*** நிறுவனத்தின் **மென்பொருளைக்** குறிப்பது?

1) ***MAP INFO*** 2) ***GRASS*** 3) ***ILWIS*** 4) ***ARCINFO*** 5) ***IDRIS*** (...........)

**7.** பின்வருவனவற்றுள் **இடம் சாராத் தரவுகளைக்** குறிப்பது

1) அரச திணைக்களத் தரவுகள் 2)ஆற்றின்பெயர்

3) செய்மதிப்படம் 4)எண்ணிலக்கபடம்

5) விமானப் படம் (...........)

**8.** புவியியல் தகவல் முறைமை ஒழுங்கில் படம் ஒன்றினை அமைக்கப்படும் **வன்பிரதிப்படம்**?

1) RS படிமம் 2) எண்ணிலக்கப் படம்

3) இட விளக்கப்படம் 4) விமானப்படம்

5) GPS படிமம் (...........)

**9.** பூகோள இடைநிலைப்படுத்தல்; **(GPS)** முறைமையின் மூன்று **பிரதான கூறுகள்**?

1) தரைக்கட்டுப்பாட்டுப் புள்ளிகள், வான்வெளிக்கூறு மற்றும் பயனிகள் கூறு

2) கட்டுப்பாட்டுக்கூறு, வான்வெளிக்கூறு மற்றும் செய்மதிக்கூறு

3) வான்வெளிக்கூறு, கட்டுப்பாட்டுக்கூறுஇ செய்மதிக்கூறு மற்றும்˙ பயனிகள் கூறு

4) வான்வெளிக்கூறு, செய்மதிக்கூறு மற்றும் தரைக்கட்டுப்பாட்டு புள்ளிகள்

5) தரைக்கட்டுப்பாட்டுப் புள்ளிகள், செய்மதிக்கூறு மற்றும் பயனிகள் கூறு (...........)

**10. தொலைத்தொடர்பாடல், வானிலை** அவதானிப்பு போன்றவற்றிற்கு பயன்படுத்தப்படும் செய்மதி?

1) முனைவுச் சுழற்சி செய்மதி 2)புவிநிலையசெய்மதி

3) உளவுச் செய்மதி 4)காலநிலைச்செய்மதி

5) தானியங்கி செய்மதி (...........)

**11.** **"தொகுதி"** என்ற சொல்லானது எந்த மொழியில் முதன் முதலில் எதிலிருந்து தோற்றம் பெற்றது?

1) பிரஞ் மொழியிலிருந்து 2) கிரேக்க மொழியிலிருந்து

3) ஆங்கில மொழியிலிருந்து 4) டொச் மொழியிலிருந்து

5) உருது மொழியிலிருந்து (...........)



M.SUJINTHAN

**12.** புவியை நோக்கி வரும் **விண்கற்கல்** அழிவடைகின்ற படை எது?

1) மாறன் மண்டலம் 2) இடை மண்டலம் 3)வெளிமண்டலம்
4) படை மண்டலம் 5) வெப்ப மண்டலம் (...........)

**13.** பின்வருவனவற்றுள் எது புவியின் **உட்பகுதியிலிருந்து** புவி மேற்பரப்பு வரையிலான படையடுக்க வரிசை முறையினை சரியாக குறிப்பிடுகின்றது?

1) உட்கோளவகம், கீழ் இடையோடு (மென்மூடி), மேல் இடையோடு (மென்மூடி), வெளிக் கோளவகம், புவியோடு
2) உட்கோளவகம், வெளிக்கோளவகம், கீழ் இடையோடு, மேல் இடையோடு, புவியோடு
3) உட்கோளவகம், புவியோடு, கீழ் இடையோடு, மேல் இடையோடு, வெளிக்கோளவகம்.
4) உட்கோளவகம், கீழ் இடையோடு, வெளிக்கோளவகம், மேல் இடையோடு, புவியோடு
5) உடகோளவகம், கீழ் இடையோடு, மேல் மையம், வெளிக்கோளம், புவியோடு (...........)

**14.** சிலாபம் வடக்கில் **தப்போவ, ஆண்டிகம, பல்லம** ஆகிய பிரதேசங்களில் காணப்படும் பாறை வகை யாது?

1) யுராசிக் பாறை
2) மயோசின் பாறை
3) கொண்டலைற் பாறை
4) சாணோகைற்பாறை
5) விஜயன் தொகுதிப்பாறை (...........)

**15.** ஒரு காலத்தில் **நீர், காற்று, பனியாறுகளால்**அடித்துச் செல்லப்பட்டும் பின் படிந்தும் பாறைகளாவன?

1) தீப்பாறை 2) உருமாறிய பாறை 3) படிவுப்பாறை
4) பிளவுகள் 5) தலையீட்டுப்பாறை எனப்படும் (...........)

**16.** பின்வரும் மாவட்ட சோடிகளுள் எச்சோடி இலங்கையில் கடந்த தசாப்த காலத்தில் கடுமையான **கரையோர அரிப்புக்கு** இலக்காகியது?

1) மட்டக்களப்பும் அம்பாந்தோட்டையும் 2) புத்தளமும் கம்பஹாவும்
3) காலியும் களுத்துறையும் 4) அம்பாந்தோட்டையும் மன்னாரும்
5) கம்பஹா களுத்துறை

**17.** **"ரெகோசொல்" (Regosols)** என்பதன் விளக்கம் யாது?

1) உலர்ந்த மணற்பாங்கான மண் 2) உலர்ந்த சவன்னா மண்
3) உலர்ந்த மலை மண் 4) உலர்ந்த தாழ்நில மண்
5) தண்டராக் காலநிலை. (...........)

**18.** **செங்கபில லெற்சோல்** மண் வகையில் மேற்கொள்ளப்படும் பொருத்தமான பயிர்ச்செய்கை எது?

1) வரண்ட தானியச் செய்கை
2) எண்ணெய் விதைகள்
3) மரக்கறி செய்கை
4) கொக்கோ, வாழை
5) நெல்லுற்பத்தி (...........)

M.SUJINTHAN

**19.** **தகடாகும் பாறை, சலவைக்கல், பளிங்குருப்பட்டப்பாறை** ஆகிய மூன்று வகையான பாறைகளும் பொதுவாகத் தொடர்புபடுவது?

1) தீப்பாறைகளுடன்
2) உருமாறிய பாறைகளுடன்
3) அடையற் பாறைகளுடன்
4) தீப்பாறைகளுடனும் அடையல் பாறைகளுடனும்
5) பசால்ட பாறைகளுடன் **(...........)**

**20.** நீரியல் வட்டத்தின் பிரதானமான **நான்கு செயன்முறைகளை** ஒழுங்கு முறையில் அமைவது?

1) படிவுவீழ்ச்சி, கழுவு நீரோட்டம், ஆவியாக்கம், ஒடுங்கல்
2) கழுவு நீரோட்டம், ஆவியாக்கம், ஒடுங்கல், படிவுவீழ்ச்சி
3) ஆவியாக்கம், ஒடுங்கல், படிவுவீழ்ச்சி, கழுவு நீரோட்டம்
4) ஒடுங்கல், படிவுவீழ்ச்சி, கழுவு நீரோட்டம், ஆவியாக்கம்
5) கழுவு நீரோட்டம், ஆவியாக்கம், ஒடுங்கல், பனிபடுநிலை **(...........)**

**21.** **மூடி, புறமையம், அகமையம்** போன்றவற்றின் சரியான ஆழங்கள் முறையே?

1) 60கிமீ,2900கிமீ,6371கிமீ
2) 65கிமீ,2700கிமீ,6378கிமீ
3) 40கிமீ,670கிமீ,6000கிமீ
4) 60கிமீ,700கிமீ,6200கிமீ
5) 100கிமீ,250கிமீ,5150கிமீ **(...........)**

**22.** **"குவி மையம்"** என்பது பின்வரவனவற்றுள் குறித்து நிற்பது யாது?

1) புவிநடுக்கம் உற்பத்தியாகும் புள்ளி
2) அயனச்சூறாவளியின் கண்
3) எரிமலை வாயின்மையம்
4) சமுத்திரத்தின் ஆழமானபுள்ளி
5) புவி நடுக்கம் வெளியிடப்படும் புள்ளி

**20.** கண்டங்கள் யாவும் ஒரே நிலத்திணிவாகக் காணப்பட்ட **புவிச்சரித காலம்** எது?

1) இயோசின் காலம்
2) கார்போணிபரஸ் காலம்
3) மயோசின் காலம்
4) கேம்பிரியன் காலம்
5) பிளைத்தோசின் காலம் **(...........)**

**21.** பின்வருவனவற்றுள் சமுத்திரத்தகடு **அல்லாதது** எது?

1) பசுபிக்தகடு
2) நாஸ்கா தகடு
3) கோக்கஸ் தகடு
4) ஸ்கோட்டியா தகடு
5) யுரேசியத்தகடு **(...........)**

**22.** **இமய மலை உருவாக்கம்** பின்வருவனவற்றில் எவையாக கருதப்படுகிறது?

1) கண்டத்தகடு நகர்வும், மடிப்புமலை ஆக்கமுமாகும்
2) விசிறி மடிப்பும், எரிமலைக் கக்குகையுமாகும்.
3) பிளவும், மேலுதைப்பும்
4) கண்டத்தகடு நகர்வும், படிதலுமாகும்
5) மேற்கூறியவற்றில் 2ம் 4ம் சரியானவை **(...........)**

**23.** **இழுவிசையின்** வகைகளாக அமைபவை பின்வருவனவற்றுள் எவை?

1) இட இழுவிசை, பிரதேச இழுவிசை
2) பக்க இழுவிசை, நேர் இழுவிசை
3) நேர் இழுவிசை, முரண் இழுவிசை
4) உயர் இழுவிசை, தாழ் இழுவிசை
5) நேர் இழுவிசை, மறை இழுவிசை **(...........)**

M.SUJINTHAN

**24.** பின்வருவனவற்றுள் **நெடுகோட்டு விசை** என்பது எதனைக் குறிக்கின்றது?

1) அமுக்க விசை 2) இழுவிசை 3) மலையாக்க விசை

4) கொறியோலிசு விசை 5) மேற்கூறிய எதுவுமில்லை (...........)

**25.** இன்று உலகில் காணப்படும் அனேக **இளம்மடிப்பு மலைகள்** எந்த புவிச்சரிதவியற் காலத்துக்கு உரியவையாகும்?

1) கேம்பிரியன் 2) மயோசின் 3) பிளைத்தோசின்

4) அல்பைன் 5) யுராஸிக் காலம் (...........)

**26.** **சாதாரண குறை** என்று அழைக்கப்படுவது பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?

1) உதைப்புக்குறை 2) நேர்மாறான குறை

3)சாதாரணபிளவுப் பள்ளத்தாக்கு 4) சாய்வுக்குறை

5) சமச்சீர் மடிப்பு (...........)

**27.** **விசிறி மடிப்பிற்கு** உதாரணம் பின்வருவனவற்றுள் எதனைக் குறிக்கின்றது?

1) பேதுருதாலகாலமலை 2) சப்ரகமுவா குன்றுகள் 3) அல்ப்ஸ் மலைகள்

4) ஹோர்சினியன் மலைகள் 5) நீலகிர் மலைகள் (...........)

**28.** “**மனிதன் மற்றும் சூழல் இடையிலான தொடர்பு பற்றிய கற்றல் மானிடப் புவியியலாகும்**” எனக் கூறியவர்?

1) கான்ரீடர் 2) ரிச்சட் ஹார்ட்சோன் 3) ஜீன் புருனே

4) ரட்சல் 5) ஹண்டிங்டன் (...........)

**29.** வயோதிபமடைதல் சுட்டி கணிக்கப்படுவது?

1) பிறப்பு வீதத்திலிருந்து இறப்பு வீதத்தை கழித்தல் மூலம்
2) பிறப்பு வீதத்திலிருந்து இறப்பு வீதத்தை கூட்டுதல் மூலம்
3) சிறுவர் தங்கி வாழ்வோர் சனத்தொகையை ஊழியப்படையின் வீதமாக காட்டுதல்
4) ஊழியப்படையின் சனத்தொகையை முதியோர் தங்கி வாழ்வோரின் வீதமாக காட்டுவதன் மூலம்
5) முதியோர் தங்கி வாழ்வோரின் சனத்தொகையை சிறுவர் தங்கி வாழ்வோரின் சனத்தொகையின் வீதமாகக் காட்டல் (...........)

**30.** மனிதன் சுயவிருப்பின்றி பல்வேறு காரணிகளால் தம்மிடம் விட்டு நகர்வடைதல் அழைக்கப்படுவது?

1) அகதிகள் 2) சுற்றுலா 3) இடப்பெயர்வு 4) பயங்கரவாதம்

5) வர்த்தகம் (...........)

**31.** சனத்தொகை **வளர்ச்சி வீதத்தில்** செல்வாக்கு செலுத்தும் காரணி?

1) பிறப்பு 2) இறப்பு 3) குடிவரவு

4) குடியகழ்வு 5) யாவும்சரி (...........)

32. **பிறப்பு** மற்றும் **மரண** வீதத்தில் ஏற்படும் சனத்தொகை மாறுபாடு அழைக்கப்படுவது?

1) இறப்பு வீதம் 2) பிறப்பு வீதம் 3)இயற்கைவளர்ச்சிவீதம்

4) சிசுமரண வீதம் 5) இடப்பெயர்வு (...........)



M.SUJINTHAN

**33.** சனத்தொகை வளர்ச்சியானது **நிலையான** வகையில் அமைந்தமை?

1) 5 பில்லியனின் பின் 2) 3 பில்லியனின் பின் 3) 5 பில்லியனுக்கு முன்

4) 7 பில்லியனுக்கு முன் 5) 6 பில்லியனின் பின் **(...........)**

34. சனத்தொகை அடர்த்தி தொடர்பான ***“$P = B - D \mp M$"*** எனும் சமன்பாட்டில் $M$ குறித்து நிற்பது எதனை?

1) சனத்தொகை 3) இறப்பு 5) குடிவரவு

2) பிறப்பு 4) இடப்பெயர்வு **(...........)**

35. ஏதாவது **பௌதீக** அல்லது **சமூக** அல்லது **பொருளாதார** தடை காணப்படவிலலையெனின் குடியிருப்புகள் பரவலடையும் தன்மையால் உருவாகும் குடியிருப்புக்கோலம்?

1) சந்திக் குடியிருப்பு 2) தோட்டக் குடியிருப்பு

3) கொத்தணிக் குடியிருப்பு 4) சிதறிய குடியிருப்பு

5) நகரக் குடியிருப்பு **(...........)**

36. **கிராம, நகரக்குடியிருப்புக்கள்** அதிகம் பரம்பியுள்ள பகுதிகளைக் கொண்ட விடை?

1) பிலிமத்தலாவ, பெனிதெனிய, கற்பிட்டி, தங்காலை

2) ஹோமாகம, லபுதுவ, மீரிகம, மினுவன்கொட, தங்காலை, மீரிகம

3) வெள்ளவத்தை, மொரட்டுவ, மினுவன்கொட,பிலிமத்லாவ

4) மொரட்டுவ, பிலியந்தல, தங்காலை, கொக்கல, மீரிகம

5) கொக்கல, லபுதுவ, அத்துருகிரிய, தங்காலை, பிலிமத்லாவ **(...........)**

37. ஐ.நா அறிக்கையின் படி **உயர்நகராக்க மட்டத்தைக்** கொண்ட ஆபிரிக்க நாடு?

1) மடகஸ்கார் 2) ரியுனியன் 3) தன்சானியா

4) எகிப்து 5) டுனிசியா **(...........)**

38. “**கோல்டன் பனானா**” ***(Golden Banana)*** நகரவலயம் பரந்திருப்பது?

1) ஜெனிவா நகரத்திலிருந்து வெலென்சியா வரை பரவலடைந்துள்ளது

2) மத்திய ஐரோப்பா

3) வடமேல் பிரித்தானியாவிலிருந்து இத்தாலியின் ஜினோவா வரை பரவலடைந்துள்ளது

4) மத்திய ஆசியா

5) சென்னையிலிருந்து மும்பை வரை பரந்துள்ளது. **(...........)**

39. இலங்கையின் நகராக்க வீதம் **குறைவாக** இருப்பதில் தாக்கம் செலுத்தியுள்ள காரணி அல்லாதது?

1) கிராம நகரவேறுபாடு குறைவாகக் காணப்படல்

2) இலங்கை சிறிய தீவாக இருப்பதால் பயணம் செய்வது இலகுவாகக் காணப்படல்

3) போதியளவான வேலைவாய்ப்பு இன்மை

4) கிராமிய அபிவிருத்தியில் கூடிய கவனம் செலுத்துதல்

5) வடகிழக்கு யுத்தத்தால் நகரங்கள் பாதிக்கப்பட்டமை **(...........)**

40. 2011 குடிசன மதிப்பீட்டு அறிக்கையின் படி இலங்கையிலுள்ள **நகரங்களின்** எண்ணிக்கை?

1) 60 2) 18 3) 84 4) 64 5) 90 **(...........)**




M.SUJINTHAN

## பகுதி II

**1.** இலங்கை நில அளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட ***1:50,000*** என்ற அளவுத்திட்டத்திலமைந்த **மகியங்கனை** இடவிளக்கப் படத்தின் ஒரு பகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. படத்தின் சமவுயரக்கோட்டு இடைவெளி ***20*** மீற்றர்களாகும். இப் படத்தினைப் பயன்படுத்தி பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

> **குறிப்பு:** படத்தின் மேல் விடைகள் எழுதப்படலாகாது. விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும், உப பிரிவு இலகக்த்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். உமது விடைத்தாளுடன் படத்தினை இணைக்க வேண்டாம்.




Scale 1:50,000

සමෝච්ච රේඛා අන්තරය මීටර් 20
Contour Interval 20m

***(i)*** படத்தில் ***A,B,C,D*** வரை இலக்கமிடப்பட்டு குறித்துக் காட்டப்படும் **பௌதிக நிலவுருவங்களைப்** பெரியடுக?

(***2*** புள்ளிகள்)

***(ii)*** படப்பகுதி எப்பகுதியில் சாய்வடையதாகக் காணப்படுகின்றது?

(***2*** புள்ளிகள்)

***(iii)*** படபகுதியின் ***1Km²*** பகுதியினை ***1: 25, 000*** என்னும் அளவுத்திட்டத்தில் காட்டுவதற்கான அளியடைப்பொன்றை வரைக? (***1*** புள்ளிகள்)

***(iv)*** படப் பிரதேசத்தில் காணக் கூடிய நிலப்பயன்பாட்டு வகைகள் ஆறினைக் குறிப்பிடுக?

(***3*** புள்ளிகள்)

***(v)*** படப்பிரதேசத்திற்குரிய நேர் கோட்டு அளவுத் திட்டத்தினை சரியான முறையில் வரைந்து காட்டுக? (***4*** புள்ளிகள்)

***(vi)*** படப்பிரதேசத்தில் குடியிருப்புப் பரம்பலில் செல்வாக்கு செலுத்தியுள்ள பௌதிக மற்றும் மனித காரணிகள் ஒவ்வொன்றினைக் குறிப்பிட்டு விளக்குக? (***4*** புள்ளிகள்)

***(vii)*** படப்பிரதேசத்தின் **வடிகாலமைப்புத்** தொடர்பாக ஆராய்க? (***4*** புள்ளிகள்)

**2.** அரசியல் எல்லைகளைக் காட்டும் உலகப்படமொன்று **(வரைபடம் *A*)** உமக்கு வழங்கப்பட்டுள்ளது. பொருத்தமான குறியீடுகள் மற்றும் நிறங்களைப் பயன்படுத்தி பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

***1)*** அற்லஸ் மலைத்தொடர்

***2)*** நைல் நதி

***3)*** பொங்குவாலா நீரோட்டம் (திசையுடன்)

***4)*** விசூவியஸ் எரிமலை

***5)*** நுல்லபார் சமவெளி

***6)*** கிழக்கு நெடுங்கோடு *100⁰*

***7)*** தென் அமெரிக்காவில் **செம்பினை** உற்பத்தி செய்யும் பிரதான நாடு?

***8)*** தென் அமெரிக்காவில் **நகராக்கம் கூடிய** நாடு யாது?

***9)*** அண்மையில் சீனாவில் அதிக **வளி மாசடைலுக்குள்ளான** நகரம் யாது?

***10)*** *2019*ல் **யுனெஸ்கோ** அமைப்பிலிருந்து உத்தியோகபூர்வமாக விலகிக் கொண்ட உறுப்பு நாடு ஒன்று?

(***10*** புள்ளிகள்)



M.SUJINTHAN

## பகுதி *III*

***3.***

*(i)* இலங்கையில் இடவிளக்கப்படங்களைத் தயாரிப்பதற்கு பயன்படும் **எறியம்** மற்றும் இலங்கையின் **தேசிய ஆள் கூற்று** எல்லைகளைக் குறிப்பிடுக? (*3* புள்ளிகள்)

*(ii)* இடவிளக்கவியற் படங்களின் முக்கியத்துவங்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (*3* புள்ளிகள்)

*(iii)* கருப்பொருள் படங்கள் என்பது யாது அவை தயாரிக்கப்படும் முறைகள் **இரண்டினைக்** குறிப்பிடுக? (*4* புள்ளிகள்)

*(iv)* இடவிளக்கப் படங்களின் பயன்பாடுகள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (*5* புள்ளிகள்)

***4.***

*(i)* புவியியல் தகவல்களை முன்வைப்பதற்கு பயன்படும் நுட்ப முறைகள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (*3* புள்ளிகள்)

*(ii)* இன்றைய காலத்தில் தொழிநுட்பத்திற்கமைய பயன்பாட்டிலுள்ள **இரண்டு** பட வகைகளினைப் பெயரிடுக? (*2* புள்ளிகள்)

*(iii)* நவீன படவரைகலையின் அண்மைக்கால விருத்தியில் இனங்காணக்கூடிய முனைப்பான அம்சங்கள் **மூன்றினைக்** குறிப்பிட்டு சுருக்கமாக விளக்குக? (*6* புள்ளிகள்)

*(iv)* நவீன பட வரைகலையியலின் பொது இயல்புகள் **நான்கினைக்**குறிப்பிடுக? (*4* புள்ளிகள்)

***5.***

*(i)* புவியியல் தகவல் முறைமை *(GIS)* என்றால் என்ன? (*3* புள்ளிகள்)

*(ii)* **"இடம் சார் தரவுகள்"** *(Spatial Data)* என்பது யாது? (*3* புள்ளிகள்)

*(iii)* புவியியல் தகவல் முறைமையின் **செயன்முறைகளைக்** குறிப்பிடுக? (*4* புள்ளிகள்)

*(iv)* புவியியல் தகவல் முறைமையின் கூறுகளினை *(Components of GIS)* குறிப்பிட்டு அவற்றில் **ஒன்றினைச்** சுருக்கமாக விளக்குக? (*5* புள்ளிகள்)

***6.***

*(i)* **தொலையுணர்வு தொழில்நுட்பம்** என்றால் என்ன என்பதனை விளக்குக? (*3* புள்ளிகள்)

*(ii)* தொலையுணர்வுத் தொழில்நுட்பத்தின் **அடிப்படைக் கூறுகள்** அல்லது **மூலகங்களினைக்** குறிப்பிடுக? (*3* புள்ளிகள்)

*(iii)* விமான ஒளிப்படங்களின் குறைபாடுகள் **மூன்றினைக்** குறிப்பிடுக? (*4* புள்ளிகள்)

*(iv)* பாரம்பரிய படவரைகலைக்கும் தொலையுணர்வு படங்களிற்குமான வேறுபாடுகள **மூன்றினைக்** குறிப்பிடுக? (*5* புள்ளிகள்)

M.SUJINTHAN